# A Study on the Problems of Customers in the General Insurance and solutions for them, A Special Reference to Ceylinco Insurance Company limited, Batticaloa.

LIBRARY
25 JUN 2005
Eastern University, Sri Lanka

RASAMANIKKAM LINGESWARAN

1032

FCM1032
Project Report
Library - EUSL

Department of Management
Faculty of Commerce and Management,
Eastern University,
Sri Lanka.

2005.

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| ஆய்வுச்சுருக்கம் | I |
| நன்றியுரை | II |
| அத்தியாயம் - 01 | |
| ▭ ஆய்வுப் பின்னணி | 1 - 6 |
| அத்தியாயம் - 02 | |
| ▭ நூலாய்வு | 7 – 21 |
| அத்தியாயம் - 03 | |
| ▭ எண்ணக்கருவாக்கம் | 22 - 27 |
| அத்தியாயம் - 04 | |
| ▭ ஆய்வு முறைமை | 28 – 32 |
| அத்தியாயம் - 05 | |
| ▭ இலங்கையின் காப்புறுதி தொழில் துறையின் வளர்ச்சி | 33 – 42 |
| அத்தியாயம் - 06 | |
| ▭ தரவு முன்வைத்தலும் பகுப்பாய்வும் | 43 – 46 |
| அத்தியாயம் - 07 | |
| ▭ முடிவுகளும் சிபார்சுகளும் | 47 – 48 |
| உசாத்துணை நூல்கள் | 49 |
| வினாக்கொத்து | 50 - 51 |

# ஆய்வுச் சுருக்கம்

ஒரு தனிமனித வாழ்க்கையில் காப்புறுதி என்பது அந்தளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றது என்பது அண்மைக்கால தகவல்களை வைத்துப் பார்க்கும்போது புரிகின்றது. இது ஆயுள் காப்புறுதி, பொதுக்காப்புறுதி என இரண்டாகப் பிரிக்கப்பட்டுச் செயற்படுகின்றது. ஒரு மனிதன் இறந்தால் அவனில் தங்கி வாழ்வோர் ஆயுள் காப்புறுதி மூட்கையில் கிடைக்கும் நட்ட ஈட்டும் பணத்தைக் கொண்டு தமது வாழ்க்கையினைத் தீர்மானிக்கின்றனர். அதே மனிதனின் சொத்துக்கள் பாதிப்புறும் வேளையில் பொதுக் காப்புறுதியைக் கொண்டு மீட்சி பெறுகின்றான்.

எனவேதான் இத்தனை முக்கியத்துவமான இக் காப்புறுதித் துறைகள் இழப்பீட்டைப் பெறும்போது அனேகமான வாடிக்கையாளர்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதைக் காணமுடியும். இதனை ஆய்வு செய்ய மட்டக்களப்பு சிலிங்கோ காப்புறுதிக் கம்பனியைத் தேர்ந்தெடுத்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இதனை ஆய்வு செய்வதன் நோக்கம் இவ் அசௌகரியங்களுக்குரிய காரணங்களை இனங்கண்டு அவற்றை தவிர்க்கக்கூடிய வழிமுறைகளை முன்மொழிவதாகும்.

இவ்வாய்வுக்காக மட்டக்களப்பு சிலிங்கோ பொதுக்காப்புறுதித் துறையில் நட்ட ஈடு கோரி அதனைப் பெறாமல், பெற்றும் திருப்தியில்லாமல் இருந்த 50 வாடிக்கையாளர்களை மையமாக வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

கம்பனியின் ஏட்டில் இவர்களின் பதிவுகளும், அவர்களின் தனிப்பட்ட அபிப்பிராயங்களும் ஒவ்வொரு நட்ட ஈட்டின்போது பெறப்படுவதால் இவ் ஏட்டை பார்வையிட்டும், கிடைக்கக்கூடிய வாடிக்கையாளர்களை நேரடியாக சந்தித்தும் மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் அவர்களின் அசௌகரியம் எவ்வாறு ஏற்பட்டது. அதற்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து ஏற்கக்கூடிய சீர்களை முன் வைக்கலாம் என நம்புகிறேன்.

- ஆய்வாளன் -